to clear this proposal immediately as a special case without insisting on the usual norms prescribed for repairs of Government buildings.

என்று மிகத் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம், சாதாரணமாக 'நாம்ஸ்' இருக்கிறது; அவைகளைக் கவனிக்காமல் உடனடியாக பழுது பார்ப்பதற்காக எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று இந்த இலாகாவுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசின் தீவிர கவனத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரே. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இதை சீக்கிரம் பழுது பார்ப்பதற்கு கவனித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 29—11—79-லே மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் இந்த வேலையைச் செய்வதற்காக 78,000 ரூபாய் அனுமதிக்குமாறு இந்தத் துறையின் இயக்குநருக்கு அனுமதி வழங்க அனுப்பியுள்ளதாக தகவல் தந்துள்ளார்கள். 29-11-79-ல் 78,000 ரூபாய் செலவிடுவதற்கு அனுமதிக்க வேண்டி அரசின் செயலாளருக்கு அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல மாதங்களாக அனுமதி வழங்காமல் இருப்பதற்கு, தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 78,000 ரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது உண்மைதான். இடையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 4 மாதங்கள் நம்முடைய ஆட்சி கிடையாது. இப்போது நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இதிலே மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம். அதனால்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 'யூஷுவல் நார்ம்ஸ்' கவனிக்கப்படாமல் உடனடியாக பழுது பார்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றப் பிறகுதான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த பதில் நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு மன நிறைவு தரும் என்று நான் கருதுகிறேன்.

3. (ஆ) போரூர் ஒன்றியத்திலுள்ள சில பகுதிகளில் 'கொள்ளை நோயால்' கால்நடைகள் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பலராமன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புக்குரிய விவர அறிக்கையை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

1980 ஜூலை 15] [திருமதி. கோமதி சீனிவாசன்]

23-6-80 அன்று கேளூர் கால்நடை மருந்தகத்தில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர் துரிஞ்சிகுப்பம் கிராமத்திற்கு சென்றபொழுது, அங்குள்ள பொதுமக்கள் 2-6-1980 முதல் 23-6-1980 வரை 30 மாடுகள் இறந்தன என்று தெரிவித்தனர். அவர் தீவிரமாக அதைப்பற்றி விசாரித்தபோது 6 மாடுகள் மட்டுமே நோயினால் பாதிக்கப்பட்டன. அவ்வாறு நோய்வாய்ப்பட்ட மாடுகளில் ஒன்றிற்கு சிகிச்சை அளித்ததில் பலனில்லாமல் இறந்து விட்டது, அம்மாட்டை பிரேத பரிசோதனை செய்ததில் அம்மாடு சப்பை நோயினால் இறந்ததாக அறியப்பட்டது. அம்மாட்டின் பாதிக்கப்பட்ட பகுதிகள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு நோயை உறுதி செய்யும் பொருட்டு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது.

கேளூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் அப்பகுதியில் மேலும் சப்பை நோய் பரவாமல் தடுப்பதற்காக துரிஞ்சிகுப்பம் மற்றும் அதைச் சார்ந்த குக்கிராமங்களில் உள்ள 1,220 மாடுகளில் 827 மாடுகளுக்கு கீழ் குறிப்பிட்டவாறு தடுப்பு ஊசிகள் போட்டுள்ளார்.

24-6-80 & 25-6-80	துரிஞ்சிகுப்பம்	346	தடுப்பூசி
26-6-80	துரிஞ்சிகுப்பம் (கொல்லை மேடு) சித்தேரி.	281	,,
27-6-80	கம்மநந்தல் ..	152	,,
28-6-80	விளாங்குப்பம் ..	48	,,
	மொத்தம்	827	,,

2-7-80 அன்று கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் நோய் புலனாய்வுக் குழு) வேலூர் அவர்கள், போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சந்தவாசல் மற்றும் துழுவ புஷ்பகிரி கிராமங்களுக்கு சென்று அங்குள்ள மணியக்காரர்களை, கால்நடை நோய் பரவியது குறித்து விசாரித்ததில் கடந்த ஓராண்டு காலமாக மேற்கூறிய பகுதிகளில் கால்நடை நோய் கண்டு எந்த கால்நடையும் இறக்கவில்லை என்பதை அறிந்தார். மேலும் கால்நடைகள் இறப்பு பதிவேட்டிலும் மேற்கூறிய பகுதிகளில் தொற்று நோய்களால் மாடுகள் இறப்புப் பற்றி குறிப்புகள் ஒன்றும் இல்லை என்பதையும் அறிந்தார். அவர் மேற்கூறிய பகுதிகளில் சென்றபொழுது எந்த கால்நடையும் நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை என்றும் கூறியுள்ளார். அவர் கேளூர் கால் நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை தொடர்பு கொண்டு கால்நடை நோய் பற்றி எடுத்த தடுப்பு நடவடிக்கைகள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குறித்து விவாதித்தபொழுது சந்தவாசல் அருகில் உள்ள வெள்ளூர் கிராமத்தில் 2 மாடுகள் நோய்வாய்பட்டிருப்பதை கேள்வியுற்று அங்கு சென்று பார்த்தார். அவைகள் குந்து நோய் காய்ச்சலால் (Ephemeral Fever) பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து தகுந்த சிகிச்சையை மேற்கொண்டார்.

துரிஞ்சிக்குப்பம் பகுதியில் கால்நடை நோய் பரவி இருப்பதைப் பற்றிய தகவல் வடாற்காடு மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் 2–7–80 அன்று தான் அவருக்கு கிடைக்கப் பெற்றதால் உடன் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்தார். மேலும் திருவண்ணாமலை கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரை துரிஞ்சிகுப்பத்திற்கு உடனடியாக சென்று தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளார்.

4. அறிவிப்பு.

ஆளுநரின் இசைவு—தமிழ்நாடு நகர்ப்புற நில்வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980, அறிமுகப்படுத்தவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவுத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு

நகர்ப்புற நில்வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.